[25th September 1958

THE HON. SRI P. KAKKAN : அந்த ரோடில் " மெடல் " செய்யப் படாத பகுதியான 2 மைல் 1 பர்லாங் 275 அடி நீளமுள்ள பகுதி இப்போது பொது மராமத்து இலாகாவிடம் இருக்கிறது. அது " மெடல் " செய்யப்பட்டு பராமரிக்கப்படுவதற்காக அந்த இலாகாவிடமிருந்து ஹை வேய்ஸ் இலாகாவால் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. அது ஒரு லட்ச ரூபாய் செலவில் " மெடல் " செய்யப் படும்.

SRI K. K. MUTHIAH : பி. டப்ள்யூ. டி. யிடம் இருக்கிற ரோடுகளை எல்லாம் ஹைவேஸ் டிபார்ட்மெண்ட் நிர்வாகத்திற்கு கொண்டுவர முடியாததால்தான் தாமதம் எல்லாம் ஏற்படுகிறது. ஆகவே, பி. டப்ளியூ. டிபார்ட்மெண்டில் இருக்கிற எல்லா ரோடுகளையும் ஹைவேஸுக்கு மாற்ற மாகாணம் பூராவிற்கும் உத்தரவிட அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா ?

THE HON. SRI P. KAKKAN : எல்லாவற்றையும் செய்துவிடமுடி யாது. நதிகளின் கரை வழி போகிற ரோடுகளை எடுத்துக் கொள்ள முடியாது. எடுத்துக்கொண்டால் கரைகள் உடைந்து சேதம் ஏற்படும். எவற்றை எடுத்துக்கொள்ள முடியுமோ அவைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

Ottery Nullah

* 524 *Q.*—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the amount set apart for the improvement of the Otteri Nullah in the City of Madras;

(*b*) the name of the agency which has taken up this work for execution; and

(*c*) the period within which this work would be completed?

THE HON. SRI P. KAKKAN : (*a*) A sum of Rs. 70,000 has been sanctioned by Government in May 1958 towards the construction of a concrete revetment to the Otteri Nullah with a small parapet wall over the revetment.

(*b*) Tenders have not yet been called for the above work. Detailed estimates for the works are under preparation in the Executive Engineer's office. The Executive Engineer has promised to submit the detailed estimates to the Superintending Engineer, Madras Circle for technical sanction by the middle of this month (September 1958). The name of the contractor can be reported only when a decision is taken on the tenders.

(*c*) The work will be completed within six months from the date of acceptance of the tender.

SRI K. VINAYAKAM : இந்த ஒட்டேரி நுல்லா சென்னையில் உற் பத்தியாகிற எல்லா நோய்களுக்கும் பிறப்பிடமாக இருப்பதால், இதில் என்ன இம்புரூவ்மெண்ட் செய்தாலும் அங்குள்ள தண்ணீர் அசுத்தத் தைப் போக்க முடியாத காரணத்தினால் ஒட்டேரி நுல்லா முழுவதையும் மூடிவிட்டு ஏழை மக்களுக்கு வீடு கட்டிக் கொள்ள அந்த இடத்தை ஜாரி செய்து தர அரசாங்கம் முன்வருமா ?

MR. SPEAKER : The hon. Member may put a separate question.